**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 123/2020**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | நதியா | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 16.03.2026.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் இல்லை. எப்படி நீதிமன்றம் வந்தேன் என்றால் பக்கத்து வீட்டுக்காரர் வெங்கடேசன் சொல்லி வந்தேன். வெங்கடேசன் உள்ள வீடு எனக்கு சொந்தமானதா என்றால் என் அப்பா பெயரில் உள்ளது. என் அப்பா பெயர் பிச்சாண்டி. வெங்கடேசன் வீட்டுக்கு வடக்குப்பக்கம் என் வீடு உள்ளது.

2. கோபாலாச்சாரி மகன் பழனி ஆச்சாரி வீடு எங்கு உள்ளது என்றால் வெங்கடேசன் வீட்டுக்கு தெற்குப்பக்கம் உள்ளது. பாஞ்சாலையம்மாள் மகள் லெட்சுமி யார் என தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடேசன் அவரது தாவாவிலேயே அவர் வீட்டுக்கு வடக்குப்பக்கம் பாஞ்சாலையம்மாள் மகள் லெட்சுமி குடியிருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அங்கு என் வீடுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல 3 தலைமுறையாக அங்குள்ளோம்.

3. என் அப்பா பிச்சாண்டிக்கு நான் ஒரே மகள் வேறு வாரிசுகள் இல்லை. நான் பிச்சாண்டியின் மகள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா இறந்த பிறகு சொத்து என் பெயருக்கு மாறியது என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் நான் இன்னும் மாற்றவில்லை. எனது அப்பா 2015ல் இறந்தார். என் அப்பா உயிரோடு அருந்த போதே வாரியார் நகர் அமைக்கப்பட்டு பிரதிவாதி எஸ்.எம். தேவராஜ் வீடுகட்டி குடியிருந்தார் என்றால் சரிதான், எங்களிடத்தில் 2 அடி அபகரித்தார்கள்.

4. 2 அடி அபகரித்ததாக சொல்லியுள்ள நிலையில் என் அப்பா உயிரோடு இருந்தபோது அது குறித்து புகாரோ அறிவிப்போ கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தின் பின்புறம் 10 அடி புறம்போக்கு இடம் உள்ளதாக எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றாலும் ஆவணங்கள் உள்ளதா என்றால் என் அப்பா சொன்னார், ஆவணங்கள் இல்லை.

5. பிராமாண வாக்குமூலத்தில் அந்த புறம்போக்கு 10 அடியை பிரதிவாதி ஆக்கிரமித்தாக எப்படி சொல்கிறேன் என்றால் பின்புறம் இடமே இல்லை அவர்கள் கட்டிவிட்டார்கள். என் அப்பா இறந்த பிறகு சொத்து எனக்கு வந்தததாக சொல்கின்ற நிலையில் மேற்படி 10 அடி புறம்போக்கு மற்றும் எங்கள் நிலத்தில் 2 அடி ஆக்கிரமித்ததாக சொல்கின்ற நிலையில் அதை மீட்க சட்டப்படி நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இடம் எனக்கு சொந்தம் என்றும் என் இடத்தையும் ஆக்கிரமித்தார்கள் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் மறுவிசாரணை</u>

1. எனது அம்மா பெயர் என்னவென்றால் லெட்சுமி. என் அம்மாவின் அம்மா பெயர் என்னவென்றால் பாஞ்சாலை.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் அம்மா பெயர் லெட்சுமி என ஆதாரம் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. என் வழக்கறிஞர் சொல்வதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனக்கும், லெட்சுமி மற்றும் பாஞ்சாலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.